## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 ஏப்பிறலில் தயாரிப்பு நடவடிக்கைகளில் பருவகாலரீதியான சுருக்கத்தையும் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலையும் எடுத்துக்காட்டுகின்றன

**பருவகாலப் போக்கினை தொடர்ந்து, தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 ஏப்பிறலில் 40.1 ஆக சடுதியாக வீழ்ச்சியடைந்தது.** உற்பத்தி, புதிய கட்டளைகள், கொள்வனவுகளின் இருப்பு மற்றும் தொழில்நிலை என்பவற்றின் முக்கிய துணைச் சுட்டெண்கள் மாதகாலப்பகுதியில் சுருங்கமடைந்து, மாச்சு மாதத்தின் பருவகால உச்சத்துடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த வீழ்ச்சியை விளைவித்தன.

பதிலிறுப்பாளர்களின் கூற்றுகளுக்கு அமைவாக, புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட சுருக்கம், குறிப்பாக, உணவு மற்றும் குடிபானம் தயாரித்தல் துறையில் குறைவடைந்த பண்டிகைக் காலக் கேள்வி பிரதான காரணமாக அமைந்தது. மேலும், உற்பத்தி துணை சுட்டெண்ணின் வீழ்ச்சியானது பெரும்பாலும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு பருவகாலத்தின் போது பல தயாரிப்பு தொழிற்சாலைகள் தமது தொழிற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தியமையினால் ஏப்பிறலில் மிக குறைந்த வேலை நாட்களின் விளைவாக ஏற்பட்டிருந்தது. பருவகால உற்பத்தித் தேவைப்பாடுகளைத் தொடர்ந்து தயாரிப்பாளர்கள் தற்காலிக பணியாளர்களை நிறுத்தியமையினால் தொழில்நிலை துணைச் சுட்டெண்ணில் வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட குறைவுகளுடன் இணைந்து கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்ணும் ஏப்ரலில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பண்டிகை பருவகாலத்தின் போது பிரதானமாக வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகளின் காரணமாக ஏப்பிறலில் நிரம்பலர்களின் விநியோக நேரம் மேலும் நீட்சியடைந்தது.

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***


| மாறி | மாச். | ஏப். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **63.9** | **40.1** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| புதிய கட்டளைகள் | 71.2 | 36.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| உற்பத்தி | 70.2 | 30.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 51.9 | 44.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 62.0 | 41.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 56.3 | 57.0 | + | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை, கேள்வி நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் மேம்படுதல்களின் காரணமாக சாதகமாகக் காணப்படுகின்றது.

**தயாரிப்பு கொ.மு.சு 40.1**
2025 ஏப்பிறல்

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு:
கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 மே 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2025 ஏப்பிறலில் 60.6 பெறுமதியைப் பதிவுசெய்து பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு 2025 ஏப்பிறலில் வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. அதற்கமைய, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் என்பவற்றுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகள் பண்டிகைக் காலக் கேள்வி மூலம் தூண்டப்பட்டு குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் காண்பித்தன. மேலும், அதிகரித்த கடன்வழங்கல் நடவடிக்கைகளால் துணையளிக்கப்பட்டு நிதியியல் பணிகளிலுள்ள வியாபார நடவடிக்கைகளும் தொடர்ந்து மேம்பட்டன. எவ்வாறிருப்பினும், மாதக்காலப்பகுதியில் நீண்ட விடுமுறை நாட்களினால் பொதுவாக வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட அதேவேளை ஐக்கிய அமெரிக்கா மூலம் விதிக்கப்பட்ட இறக்குமதி வரிகளைச் சூழ்ந்து நிலவிய நிச்சயமற்ற தன்மைகளால் கப்பற்பொருள் அனுப்பும் கம்பனிகள் பாதிக்கப்பட்டன.

புதிய வியாபாரங்கள் 2025 ஏப்பிறலில் அதிகரித்தமைக்கு நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் என்பவற்றுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் பிரதான காரணமாக அமைந்தன.

பல கம்பனிகளுக்கடையில் இடம்பெறுகின்ற ஆட்சேர்ப்புகளின் காரணமாக தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலிருந்த பணிகள் 2025 ஏப்பிறலில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | மாச் | ஏப். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **69.8** | **60.6** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 68.3 | 56.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 61.9 | 55.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.4 | 47.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 73.0 | 75.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் ஐக்கிய அமெரிக்கா மூலமான இறக்குமதி வரிகளுக்கான தற்காலிக இடைநிறுத்தத்திற்கு மத்தியில் உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 ஏப்பிறல்**
**60.6**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2025 மே 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.